**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.320/2013</u>** **தேதி.**06.03.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.2 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 06.03.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.தேவேந்திரன் |
| க/பெ. | திரு.பாலகிருஷ்ணன் |
| வயது | 48/2026 |

துவக்க நேரம் 12.25 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் முதல் விசாரணை ;

1. நான் காட்பாடியில் பதிவு பெற்ற ஆவண எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய பதிவு எண்.16/VLR/2006 ஆகும். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்துள்ளது. இந்த அழைப்பாணையில் அ.வ.எண்.320/2013 என்ற வழக்கில் தொடர்புடைய கிரைய உடன்படிக்கையை நான் எழுதியது தொடர்பாக சாட்சியம் அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

2. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பதிவு செய்யப்பட்ட கிரைய உடன்படிக்கை ஆவணத்தை நான்தான் எழுதினேன். இந்த ஆவணத்தை

நான் எழுதும்பொழுது, கலாவதி மற்றும் லட்சுமி ஆகிய இருவரும் வந்தார்கள். இந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தை நான் தயார் செய்யும் பொழுது, லட்சுமி என்பவரின் பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ஒப்படைத்தார்கள். அதைவைத்து நான் இந்த ஆவணத்தை தயார்செய்தேன். அப்பொழுது, லட்சுமி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசலை ஒப்புடைத்தார்களா, நகலை ஒப்படைத்தார்களா என்று நினைவில்லை.

3. கிரைய உடன்படிக்கையில் கண்டுள்ள வாசகங்களை இருதரப்பினர்களும் சொன்னார்கள். நான் இந்த ஆவணத்தை எழுதி முடித்தபிறகு இரு தரப்பினர்களுக்கும் படித்து காண்பித்தேன். அவர்களும் பத்திரத்தை வாங்கி படித்து பார்த்தார்கள். எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டதென்றால், ரூ.1,00,000/- கொடுத்ததாக சொன்னார்கள், என் முன்னிலையில் கொடுக்கவில்லை. முத்திரை தீர்வை, பதிவு கட்டணம், என்னுடைய கட்டணம் ஆகியவற்றை யார் கொடுத்தார் என்றால், கலாவதி என்பவர் கொடுத்தார். இந்த ஆவணத்தை நான் என்று தயார் செய்தேன் என்றால், கடந்த 14.11.2008 அன்று தயார் செய்தேன். கிரைய உடன்படிக்கையில் ஆவண எழுத்தர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால், சரிதான்.

4. இந்த கிரைய உடன்படிக்கையில் யார் யார் சாட்சிக்கையெழுத்திட்டுள்ளார்கள் என்றால், தர்மன், வேலு, மற்றொரு நபர் சாட்சிக்கையெழுத்திட்டுள்ளார்கள்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ;

1. வேலு மற்றும் தர்மன் ஆகியோர், என்னை அணுகி இந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தை தயார் செய்ய சொல்லி ஆவணத்தை கொடுத்துவிட்டு சென்றார்கள் என்றால், ஆமாம். என்னிடம் அசல் ஆவணத்தை கொடுத்துதான் இந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தை எழுதச்சொன்னார்கள் என்றால், சரியாக நினைவில்லை. நான் கிரைய உடன்படிக்கையை எழுதி முடித்துவிட்டு யாரிடம் படித்து காண்பித்தேன் என்றால், கலாவதி, லட்சுமி ஆகியோரிடம் படித்து காண்பித்தேன்.

2. கிரைய உடன்படிக்கை ஆவணத்தின்படி சொத்தை விற்பவர், பணம் வாங்கிவிட்டதாக என்னிடம் சொன்னார்களா என்றால், சொன்னார்கள். சாட்சிகள் முன்னிலையில்தான் இருதரப்பினர்களும் கையெழுத்து போட்டார்கள் என்றால், சரிதான். இந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் சாட்சிகளாக யார் யார் கையெழுத்திட்டுள்ளார்கள், அவர்கள் யார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், வேலு என்பவர் கலாவதியின் கணவர், தர்மன் என்பவர் லட்சுமியின் கணவர். 3 வது சாட்சியாக கையெழுத்திட்டுள்ளவர் அங்கு புரோக்கராக இருக்கும் ஒரு நபரா என்றால், சொத்துள்ள மேல்பாடி கிராமத்தை சேர்ந்த ஒரு நபர் கையெழுத்திட்டுள்ளார்.

3. நான் ஆவணத்தை பதிவு செய்யும்பொழுது உடனிருந்தேனா என்றால், சொல்லிக்கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். கடந்த 2008 ம் ஆண்டு அசல் ஆவணத்தை பார்த்துதான் கிரைய உடன்படிக்கை

ஆவணம் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

4. நீதிமன்ற அழைப்பாணை வந்தபிறகு வழக்கு தரப்பினர்கள் இருவரையும் நான் பார்த்து பேசிவிட்டு வந்தேனா என்றால், எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை, வழக்கறிஞர் தனிப்பட்ட முறையில் அனுப்பியிருந்தார். அதன்பிறகு, என் சார்பாக வேறொரு நபரை அனுப்பி விசாரித்துவிட்டு வரசொன்னேன். நான் லட்சுமி அம்மாளை நேரில் அணுகி பேசிவில்லை என்றாலும், போன் மூலமாக தொடர்புகொண்டு பேசினேன் என்றாலும், நான் அனுப்பிய நபர் போன் மூலமாக தொடர்புகொண்டு பேசியிருக்கலாம். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தால் நீதிமன்றத்தில்தான் வந்து பதில் சொல்லவேண்டும் என்றாலும், தரப்பினர்களை நேரில் அணுகி பேசக்கூடாது என்றாலும், நான் செய்தது தவறு என்றாலும், வழக்கறிஞர் மூலம் எனக்கு அறிவிப்பு வந்தது, அதனால் தரப்பினர்களை கேட்க சொன்னேன்.

5. கலாவதி சொல்லிதான் நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால், சரியல்ல. எனக்கு அழைப்பாணை வந்தது, அதனால் நான் நேரடியாக வந்து சாட்சி சொல்கிறேன்.

மறு விசாரணை :–இல்லை

முடிவு நேரம் 01.00 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.